ஸ்ரீயேசு சகாயம்.

நல்வழிக் கீர்த்தனை.

THE REGISTRAR ... 25 OCT 1909

இஃது
திரிசிரபுரம், பாலக்கரைச் சின்னய்யப் புலவரின்
மாணாக்கரிலொருவராகிய, இலுப்பூர்
அந்தோனிமுத்து குமாரர்,
சவரிமுத்து உபாத்தியாயரால்
இயற்றப்பட்டு,

வல்லம்
அ. அம்புறோஸ் உபாத்தியாயரவர்களால்
பார்வையிடப்பட்டு,

உய்யக்குண்டான் திருமலை மகா-ள-ள-ஸ்ரீ யாகப்பிள்ளை
குமாரர் பாஞ்சோதியாபிள்ளை
என்னும்
பொன்னுசாமி பிள்ளையவர்கள்
உதவியால்,

திரிசிரபுரம்
டாட்சன் அச்சாபீஸில்,
பதிப்பிக்கப்பட்டது.

1909.

கடவுடுணை.

முகவுரை.

பொறி புலாதிகளினால் நேரிடுகிற பற்பல துர்ச்சோதனைக்கு விலக்கி பாதுகாக்கத்தக்க போதனைகளையுடைய நல்வழிக் கீர்த்தனம் என்கிற இந்தநூல் பலருக்கும் உபயோகமாக ஆகுமென்று கருதி அச்சிட்டிருப்பதினால் இதனை யாவருங் கையேற்றுக் கொண்டாடி மகிழ்விக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

இ. வி. அ. ச.

25 OCT 1909

அட்டவணை.

பக்கம்.	கீர்த்தனை.	இராகம்.	தாளம்.
௧௮	என்னெஞ்சமே	பூபாளம்	சாப்புத்தாளம்
௧௯	என் மனமே மோக	சங்கராபரணம்	சாப்புத்தாளம்
௧௬	என்னெஞ்சே சன	பூபாளம்	சாப்புத்தாளம்
௨௰	என் மனமே யுனக்கு	காம்போதி	சாப்புத்தாளம்
௨௰	என்னெஞ்சமே	மோகனம்	ரூபகதாளம்
௨௧	என் மனமே சொல்	சங்கராபரணம்	சாப்புத்தாளம்
௨௨	என்னெஞ்சமே சொ	பூபாளம்	சாப்புத்தாளம்
௨௨	என் மனமே யுனக்கு	மோகனம்	சாப்புத்தாளம்
௫	நெஞ்சே நிதமும்	நாதநாமக்கிரியை	ஆதிதாளம்
௪	நெஞ்சே நெஞ்சே	சங்கராபரணம்	சாப்புத்தாளம்
௬	நெஞ்சே நீ சுற்றத்தாரை	பைரவி	ரூபகதாளம்
௭	நெஞ்சே நீ கேள்	கல்யாணி	சாப்புத்தாளம்
௮	நெஞ்சே நீ பொருளை	தோடி	சாப்புத்தாளம்
௯	நெஞ்சே நித்தியானந்த	எதுகுல காம்போதி	ரூபகதாளம்
௰	நெஞ்சமே வஞ்சமில்லா	சுத்த சாவேரி	சாப்புத்தாளம்
௧௨	நெஞ்சே யஞ்சாதே	தோடி	தருபதாளம்
௧௩	நெஞ்சே கேள்	பிலகிரி	சாப்புத்தாளம்
௧௪	நெஞ்சே வினைப்பதெப்போ	நாதநாமக்கிரியை	ஆதிதாளம்
௧௬	நெஞ்சே கேள்	கல்யாணி	சாப்புத் தாளம்
௧௭	நெஞ்சே நான் சொல்லு	சங்கராபரணம்	ஆதிதாளம்
௨௫	மங்கள மங்கள	தீர சங்கராபரணம்	ஆதிதாளம்
௨	மனமே நல்வழி தேடு	மோகனம்	சாப்புத்தாளம்
௫	மனமே நீ யுடலே	தோடி	சாப்புத்தாளம்

அட்டவணை

பக்கம்.	கீர்த்தனை.	இராகம்.	தாளம்.
௪	மனமே மோக்ஷானந்த	காம்போதி	சாப்புத்தாளம்
௬	மனமே நீ மயங்கா	மோகனம்	ரூபகதாளம்
௭	மனமே யென் சொல்லை	பைரவி	ரூபகதாளம்
௮	மனமே யுனக்கு நான்	பூபாளம்	சாப்புத்தாளம்
௯	மனமே யுனக்கு க்கவலை	பைரவி	ரூபகதாளம்
௧௧	மனமே கதி வேறுனக்கு	கல்யாணி	சாப்புத்தாளம்
௧௨	மனமே நீ கேளாய்	நாத நாமக்கிரியை	ரூபகதாளம்
௧௪	மனமே யுடலை விரும்பாதே	தோடி	சாப்புத்தாளம்
௧௫	மனமே அனுதியும்	காம்போதி	சாப்புத்தாளம்
௧௭	மனமே பொருளை	தோடி	சாப்புத்தாளம்
௧௭	மனமே நான் சொல்வதை	மோகனம்	சாப்புத்தாளம்

பக்கம். பன்னிரு சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

௧. சீர்கொண்டிலங்கிடும்.

அறுசீர்க்கழி நெடில்விருத்தம்.

௧. நீதிநெறி முறைறவழுவா.

௨. மயிலாடக்கண்டிருந்த.

சாத்துக்கவிகள்.

புதுக்கோட்டை சமஸ்தானம் காலேஜ் தமிழ் வித்வான்

பிரதம பண்டிட்

பி. சரவணப்பிள்ளையவர்கள்

பாடியது.

ஐஞ்சீர்க் கலிவிருத்தம்.

கதிர்செய் ஞானமுணர்ந்தவ ர்
 கைக்கொடு மதிக்க ப்
புதியவின் னிசைகூர்ந்த ணி
 பொலிவுறப் புகழு ம்
மதிகொ ணல்வழிக்கீர்த்த னை
 மதுரம் வாயமுர் தாம்
இதமுரைத்தனனேர் சவரிமு த்
 தென்னுமா வியல்போ ன்

தஞ்சையைச்சார்ந்த வல்லம் திருப்புகழ்க்கொடை,

அ. அம்புரோஸ் உபாத்தியாயரவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழி நெடிலடி விருத்தம்.

உள்வழிக்கு மறுளதற்கும் எட்டாததாகநிற்கு ம்
 ஒருபிரான்பா ற்
செல்வழியைமெய்வேதந் துலக்குமன்றிப்பி ற
 விளக்காத் திட்டந்தன் னை
கல்வழிக்கீர்த்தனையெனும்நூலா விலுப்பூர்ச்சவேரிமுத் து
 ஞாலத்தோர்க் கு
எல்வழி கண்ணறிவதுபோல் உபயோகமாம்படிசெ ய்
 திட்டான் மா தோ

—o—

வெண்பா.

புகழ்கொண்ட பண்டைப் புலவர்களை மெச் சி
மகிழ்கின்றவர்க் கிந்தான் மாட்சி இகழ்கின்ற
சொல்வழி இலுப்பூர்வாழ் துங்கன் சவேரிமுத் து
நல்வழிக் கீர்த்தனை த னை

கடவுள் துணை.

நல்வழிக் கீர்த்தனை.

25 OCT 1909

கடவுளைப் பிரார்த்திக்கும்

பன்னிரு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

சீர்கொண்டிலங்கிடும் ஏகாந்தசோதியாய் ச்
செப்பரிய சத்தியவடிவாய் ச்
செகதலமெலாமொரே தேவாதிதேவனாய் ச்
செயசுகுண சருவேசனாய் ப்
பேர்கொண்டிலங்கிடும் காரணப்பொருளுமாய் ப்
பெருமைநிறை யதிபதியுமாய் ப்
பிரியமுற்றியாவையும் உண்டுசெய்தவனுமாய் ப்
பேத மணுகாதவனுமாய் ப்
பார்கொண்டிலங்கிடும் இனியசாதகனுமாய் ப்
பக்ஷம்வைத் தாள்பவனுமாய் பி
பசரியதன்மையாய் எங்கெனும்நிறைந்தரு ள்
பர சச்சிதானந்த னே
நேர்கொண்டிலங்கிடும் நல்வழியின்றூற்றமி ழ்
நெறியோடு பாடுதற் கு
நின்னுதவிசெய்திட என்னிருதயத்து னை
நினைந்து மன்றாடினே னே

அவையடக்கம்.

அறுசீர்க்கழி நெடில் விருத்தம்.

நீதிநெறிமுறைவழுவா திகபரத்துக்கிரைந்துலகோ ர்
நேர்மையோங்க ச்
சோதிசதிரொளிர்கராய் நல்வழிக்கீர்த்தனையெனும்நூ ற்
றுலங்கச்செய்தே ன்

எதொருபேதா பேதகங்களிருந்தாலும ஊ
மிசைத்தமிக் க
சாதகமாய்ப்பரிசரித்துக் கையேற்பீர்கனம்பெருகு ந்
தமிழ்வல்லோ ரே

வணக்கம்.

அறுசீர்க்கழி நெடில் விருத்தம்.

மயிலாடக்கண்டிருந்த வான்கொழிநடம்புரியு ம்
வாறுபோலு மீ
குயில்கூவுமொலியதைக்கேட் டொருகாகங்கத்துகின் ற
சொள்ளைபோலு ம
நயமேவுமதனை யெனக் கிள்ளைவாய்பேசுகின் ற
நவங்கள்போலு ம்
செயமேவும்பாவலர்முன் யான்சிறுவன்நல்வழி நா வ்
செப்பலுற்றே ன

நல்வழிக் கீர்த்தனை.

இராகம் மோகனம் சாப்புத்தாளம்.

பல்லவி.

மனமே நல்வழி தேடு அநித்தியலோக
வாழ்வை நம்பாதே கேடு

அநுபல்லவி.

அநேக நாளிருந்தேன் ன
அறுசுவை சுகித்தேன் ன
தனவானும் வாழ்ந்தேன் ன
தார்தலம புகழ்ந்தேன் ன (ம)

சரணங்கள்.

க தந்தைதா யிருந்தேன் ன
தலைவிபத் திருந்தேன் ன
மைந்தர்க ளிருந்தேன் ன
மகத்துவத் தாலென் ன (ம)

உ கனகம்பொன் னணிந்தேன் கா
கண்ணொளி கூர்ந்தேன் ன
கனிமலர் புனைந்தேன் ன
நாகரிகத் தாலென் ன (ம)

௯ விபசாரங்கள் சலாக்கிய ம்
மிகவுந்தகாநிர்ப் பாக்கிய ம்
சவேரிமுத்தருள் வாக்கிய ம்
தனைநம்புவது யோக்கிய ம் (ம)

இராகம் காதநாமக்கிரியை ஆதிதாளம்.

பல்லவி.

நெஞ்சே நிதமுந்துதிசெ ய்
நாதன்பதத் தை (நெ)

அநுபல்லவி.

தஞ்சம்வே றென்றிராம ற்
சமையம் தவறிடாம ல்
அஞ்சல் குறைவில்லாம ல்
அருளை மறந்திடாம ல் (நெ)

சரணங்கள்.

௧ கண்ணில் பராக்கில்லாம ல்
காதிற் கேள்வியில்லாம ல்
உண்ணும் நினைவில்லாம ல்
ஓதல் பழுதில்லாம ல் (நெ).

௨ பாவத்தைச் சிந்தியாம ல்
பலர்தன் முகம்பாராம ற்
கோபத்தைப்பாவியாம ற்
குணப்பேதகமில்லாம ல் (நெ)

௩ காலங் கழிந்திடாம ற்
கவலைவேறொன் றில்லாம ல்
சாலங்கள் செய்திடாம ல்
தழலுக் காளாகிடாம ல் (நெ)

இராகம் தோடி சாப்புத்தாளம்.

பல்லவி.

மனமே நீ யுடலைநம்பாதே சற்றும் (ம)

அநுபல்லவி.

கனமாயமாய்மூடிக் கண்டிறவாமுன்ன ம்
காறுமை வொழிந்துபோ ம்
கவனமாய்நான் சொன்னே ன் (ம)

சரணங்கள்.

௧ எரியின்கரைதனி லிடிந்துவிழுமண்போ ல
இருநிலத் தழிந்துபோ ம
எறலசயாய் நான்சொன்னே ன் (ம)

௨ ஓடும் உதகத்தெழுந்தடையுங் குமிழிபோ ல
ஒருசணத் தழிந்துபோ ம
உறுதியாய் நான்சொன்னே ன் (ம)

௩ ஆற்றோடையருகினில் அண்டியமரம்போ ல
அநித்தியம் நிலையில் லா
தழியும் நிச்சயஞ்சொன்னே ன் (ம)

இராகம் சங்கராபரணம் ஆதிதாளம்.

பல்லவி.

நெஞ்சே நெஞ்சே நெஞ்சே நீ என் சொற்கேள் இன்ன ம்(நெ)

அநுபல்லவி.

தஞ்சந்தஞ்சமெனவே சகதிசன்றனை நித்ய ம்
சாஷ்டாங்கஞ் செய்திட்டா லோ
சௌபாக்கியம் நமக்குண் டு (நெ)

சரணங்கள்.

௧ செம்பொன் னாபரணங்கள் தேகத்தணிந்துமென் ன
தீயவுலகமதைச் செயித்தாலோ கதியுண் டு(நெ)

௨ பலருங்கொண்டாடவே பவுசுபெற்றிருந்தென் ன
பரலோகராஜனைப் பணிந்தாலோ செயமுண் டு(நெ)

௩ பொருள்சுகத்தாலேநாம் பூரித்திட்டாலுமென் ன
பொன்னம்பரநாதனைப் புகழ்ந்தாலோ பலனுண் டு(நெ)

இராகம் காம்போதி சாப்புத்தாளம்.

பல்லவி.

மனமே மோட்சானந்தமான சின்மயன்றன் னை
வணங்கி நமஸ்கரித்து வாழ்த்திடுவா ய்

அநுபல்லவி.

அனைய உயிர்செய்தரு ள்
அமலோன் வேறில்லை யே
கனவிலுந் துதிசெய் து
கருதாவிடிற் றொல்லை யே (ம)

சரணங்கள்.

௧ அந்திசந்தியுந்தொழு தாசரித்தானுன க்
கதிகபாக்கியமுண்டு அல்லாமல்பெற ற
சொந்ததந்தைதாயவரின்றி வேறிலைமெய்யாய் ச்
சொன்னேன் நீ மறுமொழி சொல்லாம ல்
எந்தநேரமும் நினைத்திருகரஞ்சனை நீட்டி
வந்தனம்புரிந்து பாமாலைதனையே சூட்டி (ம)

௨ நித்யவேதாந்தவேதாதி யனுதிமெ ய்
நின்மலனை நிரந்தரனுமன்ப ர்
சித்தகமலமதிற்சிறந் துதையப்பிரவேச ஞ்
செய்யுந்தயாபர துரந்தரனு ம்
நத்தியெந்நேரமும் நயந்துகதியை நாடி
மெத்தப்பிரசித்தமாய் விளங்குஞ்செந்தமிட் பாடி (ம)

௩ வானுலகமரர்கள் யாவுங்கொண்டாடி யே
மகிழ்ந்துவந்தனஞ்செய்யும் வல்லவனுமிந் த
நானிலந்தனிற்சீவ பல்லுயிர்க்கமுதீந் து
நாளுந்தற்காத்தருள் நல்லவனு ம்
ஆனதிருவலவரடி யிணைதனைப் போற்றி
ஈனமுறுமலே இனியகவிகள் சாற்றி (ம)

இராகம் பைரவி ரூபகதாளம்.

பல்லவி.

நெஞ்சேநீ சுற்றத்தாரை நம்பாதே நா ன்
நிச்சயமாய்ச் சொன்னே ன் (நெ)

அநுபல்லவி.

சஞ்சலம்பிணிநோய் கொண்டிளைத் த்
தனம்பொருளெல்லாந் தானழிந்திட்டா ற்
பஞ்சையென்றெண்ணிப் பழித்துநகைத்து ப்
பாரினிற்பரிகாசஞ் செய்குவா ர் (நெ)

சரணங்கள்.

௧ பசிபொறுக்கவொண்ணுமல் தவித்து ப்
பரிதாபங்கள் கொண்டலைந்திட்டாலு ம்
உசிதமாயுகந் துண்கொடாம ல்
ஊரில்போவெனச் சீறியுரைப்பா ர் (நெ)

௨ மேலில்போர்த்த வஸ்திரமில்லாம ல்
மெலிந்துதேகம் நொந்தலைந்திட்டாலு ம்
பாலிலழைத்துத் துயில்கொடாம ற்
படிரென்றுரைத்து முடுகிப்போவென்பா ர் (நெ)

௩ இருக்கப்படுக்க மனையில்லாம — ல்
இதையமுருகி யேங்கினாலு — ம்
சுருக்கிலழைத்து இடங்கொடாம — ற்
தூரப்போவெனத் துரத்தியடிப்பா — ர் (நெ)

இராகம் மோகனம் ரூபகதாளம்.

பல்லவி.

மனமே நீ மயங்கா — தே சற்றும்
மனமே நீ மயங்கா — தே.

அநுபல்லவி.

இனியுனக்கென்ன ஏகவியாபச — ர்
வேசனை யென்றென்று — ம்
பூசித்தால் புண்ணிய — மே (ம)

சரணங்கள்.

க பாவவழியை நீக்கு — உன்னைப்
பரமகதிக் காளாக் — கு
ஏவும்பேய்தந்திரத்தினில்விழாமற் சர்வேசனையென்றென்று — ம்
பூசித்தால் புண்ணிய — மே (ம)

உ முத்திமோக்ஷ மெய்வீடு — என்றும்
முடிவில்லாத நன்று — டு
இத்தருணத்திலிசழ்ந்திடாமற் சர்வேசனையென்றென்று — ம்
பூசித்தால் புண்ணிய — மே (ம)

௩ நான் சொல்வதுவே சத்தியம் — வாழ்வை
நம்பிடாதே அநித்திய — ம்
என்கவலையுந்தனுக்கின்னஞ் சர்வேசனையென்றென்று — ம்
பூசித்தாற் புண்ணிய — மே (ம)

இராகம் கல்யாணி சாப்புத்தாளம்.

பல்லவி.

நெஞ்சே நீ கேள் சகதீச — ன் எங்கும்
நிறைந்த நின்மல மகராஜ — ன்

அநுபல்லவி.

அஞ்சல் செய்தவரி — ணை
யடியைத் துதிபுரிவா — ய்
அனந்தனந்த காலமு — ம்
அதிகசுகம் பெறுவா — ய் (நெ)

சரணங்கள்.

௧ பல்லுயிர்களுக் குபயோகன் என்றும்
பாதுகாத்தருளுங் கிருபாசன்
வெல்லு சாக்ஷாதி மெய்யேகன் நம்பி
வேண்டுவோர்க் குதவு நிர்வாகன்
அல்லும் பகலும வ
ரடியைத் துதிபுரிவா ய்
அனந்தனந்த காலமு ம்
அதிசுகம் பெறுவா ய் (நெ)

௨ பாவவிமோசனப் பிரகாசன் முத்தர்
பக்தர்க்குகந்த விசுவாசன்
மூவுலகும் புக ழுல்லாசன் நித்திய
மோட்சபதவியருள் நேசன்
ஆவல் கொண்டவரி னை
யடியைத் துதிபுரிவா ய்
அனந்தனந்த காலமு ம்
அதிசுகம் பெறுவா ய் (நெ)

௩ இன்பநித்தியமோட்ச பாக்கியம் ஒன்றும்
இணையில்லாதமாச லாக்கியம்
உம்பர்தமக்குகந்த யோக்கியம் இவை
உறுதிகொள்ளாவிடில்நிர்ப் பாக்கியம்
அன்பாய் நம்பியம ல்
ரடியைத் துதிபுரிவா ய்
அனந்தனந்த காலமு ம்
அதிசுகம் பெறுவா ய் (நெ)

இராகம் பைரவி ரூபகதாளம்.

பல்லவி.

மனமே யென்சொல் லை மகிழ்ந்துநீகேளாய் இந்த
மன்றில் வேறொன்றில் லை (ம)

அநுபல்லவி.

தினமும்நல்வழி தெரிந்து நோக்கு
எனைச் சர்வேசன்றனக்கிஷ்ட மாக்கு (ம)

சரணங்கள்.

௧ துஷ்டர்தன்னோடே டாடிடாதே
தொல்வினை தன்னைத் தேடிடாதே
நஷ்டப்பேய்வலை நாடிடாதே
நம்பியவம்போய் வாடிடாதே (ம)

உ புறணிகோள்கள்குண்டணி யல்லாதே
புண்ணியம்போலுதாசனஞ் சொல்லாதே
கருதிவீண்தொழில்களைக் கல்லாதே
காருண்ணிய பார்க்கிலை பொல்லாதே (ம

௩ பலவிஷயம்பொய்மொழி கூறாதே
பாரில்மெய்வழிதனை மாறாதே
சவாிமுத்துசொல்வதை மீறாதே
தரணியிலொருமுறை வாராதே (ம

இராகம் தோடி சாப்புத்தாளம்.

பல்லவி.

நெஞ்சேநீ பொருளைநம்பாதே சற்றும் (நெ

அநுபல்லவி.

அஞ்சாமற் கள்வர் கொ ண்
டசலவோரடிடுவா ர்
அயலாரும் அடுத்தவ ஞ்
தபகரித்திடுவா ர் (நெ

சரணங்கள்.

க வழக்குவம்புகளிலுமே சிலவாகு ம்
மாயமாயுதவாமற் கைவிட்டுப்போகு ம்(நெ

உ மறைத்துமறைத்துப் பத்திரஞ்செய்தாலுங் குறையு ம்
வைத்தவிடத்திலில்லா தோடியேமறைய் ம்(நெ

௩ பஞ்சங்கள் நோய்தன்னால் பாரித்சொல்லாம ற்
பலவிதமாய்முற்றும் அழியும்சில்லாம ற்(நெ)

இராகம் பூபாளம் சாப்புத்தாளம்.

பல்லவி.

மனமேயுனக்கு நான்சொல் வழியகலா தே
மன்றில் ஓர்கதியுண்டென்றே புகலா தே

அநுபல்லவி.

கனமாயவோகத்தி ன்
கடலில் விழாம ல்
காருண்ய பரிபூரணன் பத ஞ்
சேரவனுதினங் கோரித்துதிபு ரி (ம)

சரணங்கள்.

௧ நாளுந்தேவதாபக்தியைக் கைக்கொண் டாலும்
நன்மை சலாக்கியமுண்டு நமக்கு மேன் மேலும்
பாழுங்கானற்கிறைத்த நீரதைப் போலும்
பண்பிலிவையுணரா விடிலொருக் காலும்
பாபவிமோசனம் புவியிலுனக்கில் லை
அவமுறுமலே கவனியனுதின ம் (ம)

௨ உலகவாழ்வை நம்பினோர்க்கென்ன சலாக்கியம்
உண்டென்றுறுதி கொண்டாலல்லோ நிர்ப் பாக்கியம்
விலகியவை வெறுத்துவிடுவதே யோக்கியம்
விண்ணம் பரத்தில் பேறுபெறுவதே பாக்கியம்
மிகையுறுமலே வேண்டியனுதின ம்
அகமகிழ்ந்துநீ ஆசரித்தி டு (ம)

௩ பாவத்திலனுதினம் பற்றாத லேனோ
பரம சர்வேசற்கேறாத் தீது தானே
கோபத்தை முன்னிட்டுக்கொள்வதும் வீணே
குடிகேடுவருஞ் சொன்னேன் கண்முன்பாய்க் காணே
கோதுறுமலே குவலயந்தனி ல்
நாதன்மலரடி நயந்துதொழுதி டு (ம)

இராகம் எதுகுலகாம்போதி ரூபகதாளம்.

பல்லவி

நெஞ்சேசிகித்தியானந்த நின்மலசுகந்தன் னை
நீமறவாதே சொன்னே ன்

அநுபல்லவி.

துஞ்சியபின்மோட்ச துய்யகதியிற்சென் று
சுத்தநித்திய கர்த்தனுரிட ம்
முத்திமலர்முடி பெற்றுவாழலா ம் (நெ)

சரணங்கள்.

௧ பூதலந்தனை நம்பிப் பொன்னம்பரத்தை நீங்கி ப்
போவதுவும் பொல்லா தே
ஆதலினால் சற்று ம்
அநுசரியாம லே
அன்போடும்பர்க ளின்பமாய்ப்பு க
ழென்பராபரன் றன்பதம்ப ணி (நெ)

௨ இத்தனைகாலமா யிந்தவுலகமி சை
என்னசுக மடைந்திட்டோ ம்
முத்திபெறவென்று லோ
முழுதுமறவெறுத் து
மூடுகிவருங்கொடு இடர்கள்சகித்தோ ரே
கடவுள் திருமல ரடியிற்குடியி ரு (செ)

௩ பாவவிமோசனப்புயனுரு தனுத்தியலி ன்
பலகவலை கொன்றா தே
ஆவதுந்தனுக்கு நா ன்
அன்பாயினைகஞ் சொன்னே ன்
அகத்திலுகந்திது சகத்தைதவெறுத்து நீ
மகத்துவமேவிய சுகத்தைநாடி டு (செ)

இராகம் பைரவி ரூபகதாளம்.

பல்லவி.

மனமேயுனக்குக் கவலையேன்சொல்வா யிந்த
மன்றிலெக் நேரமு ம் (ம)

அநுபல்லவி.

தினந்தினஞ் சகதிசனைநாடி த்
தெண்டஞ்செய்தால் சுகமனந்தங்கோ டி (ம)

சரணங்கள்.

௧ சுத்த இதயத்தோடுற வாடித்
தூய கமலபதத்தைத் தேடிப்
பத்தியாய்ப் பகலிரவும் நாடிப்
பணிந்திட்டால்சுக மனந்தங் கோடி (ம)

௨ பலவிசாரங்கொண் டுலகில் வாடிப்
பாவவழியிற் பரிந்து டாடி
மெலிவுறுமலே விலகி யோடி
வேண்டினல்சுக மனந்தங் கோடி (ம)

௩ நம்பியே அறவழியை நாடி
நாளுந்தாழ்வின்றி நயந்து கூடித்
திண்புவியிற் பாமாலை பாடிச்
சேவித்தாற்சுக மனந்தங் கோடி (ம)

இராகம் சுத்தசாவேரி சாப்புத்தாளம்.

பல்லவி.

நெஞ்சமே வஞ்சமில்லாமலுனக்கு நான்
நிச்சயமாகச் சொன்னே ன்

அநுபல்லவி.

தஞ்சம்வேறுனக்குண்டோ யில்லை யே
சத்தியமிது நித்தியமு ந்
துத்தியஞ்செய் பக்தியுட ன் (வெ)

சரணங்கள்.

க மன்றினிலொன்றில்லாக் காலத்திலுந்த னை
வகுத்தோன் வேறில்லை யே
இன்றுநீ யந் த
நன்றி மறவாமல் ல்
என்பரனார் தன்பத மே
நம்பிநீதங் கும்பிடுவா ய் (வெ)

உ தேவுலகம்புவி யாவும்படைத்தரு ள்
தேவன் வேறில்லை யே
தாவியவர்த ன்
பதத்தை நாடி யே
சந்ததமுஞ் சொந்தமெ ன
வந்தனஞ்செய் யந்திபக ல் (வெ)

ங ஞானமாய்நடுத் தீர்வைசொல்வல் ல
ஞாயாதி வேறில்லை யே
ஆனதாலிந் த
அவனிமீதினி ல்
ஆசைவிசு வாசமதாய் ப்
பாசமுட னேசிபித ம் (வெ)

இராகம் கல்யாணி சாப்புத்தாளம்.

பல்லவி.

மனமே கதிவேறுனக்குண் டோ. இந்த
மன்றில் கிடையாது மெய்கண்டா ய்

அநுபல்லவி.

தனியாதிமுதலான சகதீசன்றனை நித்திய ஞ்
சரணஞ்செய்யாதிருந்தால் தாழ்வுநேரிடுஞ் சத்திய ம் (ம)

சரணங்கள்.

க அவனியிலுனையிது நாளாய்க் காக்கும
அமலோன்வேறிலை யின்னங்கேளா ய்
தவசெப நெறியுற்று ச்
சாங்கோபாங்கமாய் நித்திய ஞ்
சரணஞ்செய்யாதிருந்தால் தாழ்வுநேரிடுஞ் சத்திய ம் (ம)

உ. நமக்குவேண்டிய பொருள்யாவுந் தந்த
நாதநீதமெஞ் ஞானத்தேவ ன்
தமக்கே யனுதினமு ந்
தாரணிதனில் நித்திய ஞ்
சரணஞ்செய்யாதிருந்தால் தாழ்வுநேரிடுஞ் சத்திய ம் (ம)

௩. நம்பினோர்தமக் கனுகூலன் நம்மை
நாளுங்காத்தருள் ஜெயசீல ன்
தன்பதங் கதியென் றே
சாஷ்டாங்கமாய் நித்திய ஞ்
சரணஞ்செய்யாதிருந்தால் தாழ்வுநேரிடுஞ் சத்திய ம் (ம).

இராகம் தோடி திருப்-தாளம்.

பல்லவி.

நெஞ்சேயஞ்சாதே கொஞ்சமு ம் (நெ)

அநுபல்லவி.

வஞ்சகமின்றியே தஞ்சமளவினு ம்
வெஞ்சினங்கொண்டுபே யென்செய்திட்டாலு ம் (நெ)

சரணங்கள்.

க. மாயமதாகவே நேயமாநாடி யு
வாயங்களாக அபாயங்கள்செய்யினு ம்(நெ)

உ. பாவவலையிற்குள் மேவியமுழ்த்திட ப்
போவெனவேதள்ளி யேவினும்பூவினி ல்(நெ)

௩. பேசரும்ஞானப்பிர காசநம்மூர்த்தி யை
நேசமாயென்றென்றும் பூசித்துநம்பி யே(நெ)

இராகம் நாதநாமக்கிரியை ரூபகதாளம்.

பல்லவி.

மனமே நீ கேளா ய் அன்பாய்வீ
ணினைவுகள் பாழா ம்

அநுபல்லவி.

வினையுறுங்கரிவந்தனைவிடிற் கிரமம்
அனேகவிதச லாக்கியம் இனங்
கனமோடதிக பாக்கியம் வெகு (ம)
சனரும் புகழ்வார் யோக்கியம்

சரணங்கள்.

க பாவத்தை மாற்று யுன்மீதுள்ள
கோவத்தை யாற்றுய் ஞானநற்
றீவத்தை யேற்றுய் பத்தர்போலப்
பாவித்தே போற்றய்
தூவத்தைத் தினந் தாவித்தேநீனை
ஆபத்தொன்றும் வாராது பரன்
கோவமுனைச் சாராது கடி
மேவிவந்து சேராது (ம)

உ கடவுளைத் தேடு அவர்திரு
வடியினை நாடு நமஸ்கரித்
துடனுற வாடு சுத்தர்க
ளிடமதிற் கூடு
சடமில்லாதுபொய் கொடியழியுமெய்
தடை வேறுண்டோ சொல் நீயே இது
திடமென்றே யறி வாயே தப்பா
துடனே தான் வெறுப்பாயே (ம)

ங இருநில இன்ப சுகமதைக்
கருதிட துன்பம் தேடிடும்
பொருள்மிக வம்பு உண்டாக்கும்நீ
யுறுதியாய் நம்பு
பரன்மொழியைக்கல் அறவழியிற்செல்
மருகிமோசம் போகாதே இது
தருணம் நீ யகலாதே அழல்
நரகில் சென்று வேகாதே (ம)

இராகம் பிலகிரி சாப்புத்தாளம்.

பல்லவி.

நெஞ்சே கேள்வின்ன மின்றி
நிகழ்த்துவே னின்ன ம்

அநுபல்லவி.

நீதியாதியனுதி சோதி வி
னேதபங்கயப் பாதமேப ணி (நெ)

சரணங்கள்.

க தேவனவ ரல்லால் மன்றிலே
தெய்வம் வேறில்லே யே
செப்பினேனொரு தப்பில்லாம லே
கற்போடவரிரு பொற்பதம்ப ணி (நெ)

௨ மோட்சமே நித்தியம் லோக
முடியும நித்திய ம்
மோசமாகிய பாசம்நீக்கி யே
நேசமாச்சக நீசனைப்ப ணி (நெ)

௩ உண்மையாச் சொன்னேன் இவை
யுறுதி யென்றெண் ணே
உய்யுமளவினும் வையமீதினி ல்
அய்யமின்றிப் மெய்யனைப்ப ணி (நெ)

இராகம் தோடி சாப்புத்தாளம்.

பல்லவி.

மனமேயுடலை விரும்பாதே சற்றும் (ம)

அநுபல்லவி.

கனஅசுசியுள்ள நூர் க்
கந்தப் பொய் வீடு
கடுகியே உடையும ண்
கலச்சிறு ஓடு (ம)

சரணங்கள்.

௧ பலனென் றில்லாதவீ ண்
பாழ்சுடு காடு
பாவ வழியையகித ம்
பரிந்துவு டாடும் (ம)

௨ உய்ந்த பின்னென்றைக்கு ம்
உதவாத கூடு
ஒகோரீ யிவைநம் பா
துடன் றள்ளிப் போடு (ம)

௩ சவரிமுத் தனக்குச்சொ ல்
தன்மையை நாடு
தவறினல் வருகு ஞ்
சதாகோடி கேடு (ம)

இராகம் நாதநாமக்கிரியை ஆதிதாளம்.

பல்லவி.

நெஞ்சே நினைப்பதெப்போதோ சகதீசனை (நெ)

அநுபல்லவி.

வஞ்சகத்திலும் வம் பு
வெஞ்சினத்திலுந் துன் ப
சஞ்சலத்திலுங் கால ந்
தன்னையே நீ கழித்தா ல் (நெ)

சரணங்கள்.

க மோசத்திலும் அக்கிர ம
வேஷத்திலு மடயோ ர்
பாசத்திலுங் காலத்தை ப்
பாழாக நீ கழித்தா ல் (நெ)

உ தோஷகத்திலுங் கெட் ட
போதகத்திலுந் துஷ் ட
சாதகத்திலுங் கால ங்
தன்னையே நீ கழித்தா ல் (நெ)

மாலையிலும் உத ய
காலையிலும் பற்ப ல
வேளையிலுங் காலத் தை
வீணாக நீ கழித்தா ல் (நெ)

இராகம் காம்போதி சாப்புத்தாளம்.

பல்லவி.

மனமே அநாதியும் ஆதியுமாகி ய
வல்லோற்கூழியஞ் செய்குவா ய்

அநுபல்லவி.

கனவிலுமறவாமற் கமலபதத்தைக் கண்டு
கவனித்தாழியஞ்செய்தா லனுகூலம்நமக்குண்டு (ம)

சரணங்கள்.

க சிந்தித்துக்கிரிகையால் தேடித்தினமுங் கண்டு
சேவித்தூழியஞ்செய்தா லனுகூலம்நமக் குண்டு (ம)

உ வாக்கால்துதித்துப்போற்றி மலரிணையடி கண்டு
வணங்கிபூழியஞ்செய்தா லனுகூலம்நமக் குண்டு (ம)

ந சென்னிகையால் தண்டஞ்செய்துசேவடி கண்டு
சிறந்தவூழியஞ்செய்தா லனுகூலம்நமக் குண்டு (ம)

119303

இராகம் கல்யாணி சாப்புத்தாளம்.

பல்லவி.

நெஞ்சேகேள் பரிகாரம் இன்னம்
நீணிலத்துனக்கேன் விசாரம்

அநுபல்லவி.

பஞ்சபூதத்தாலே நேரு ம்
பவத்மைதீவூ நீக்கித்
தஞ்சந்தஞ்சமென் றுன்னை த்
தவிராதடிமை யாக்கிச்
சாதகத்துடன் நீதமேவி ய
போதமருள்ஜெக நாதனிடமதி ல் (நெ)

சரணங்கள்.

௧ ஐம்புலநதிகள்கூடி மோசம் பண்ண
அடுத்து செய்திடுஞ்சாவ காசம்
நம்பினல் வருகும்பார் நாச மோட்ச
நாட்டிற் சேர்வதுமாபிரை யாசம்
செம்பொன்னைத் தீயிற் சுத்தி
செய்தல் போலவே முத்தி
அன்பாயுனக்குச் சித்தி
யகலாதுறுதி பக்தி
யாசைமெய்விசு வாசபாச ன்
னேசமாய்ச்சக தீசனிடமதி ல் (நெ)

௨ மோக பாவங்கள்தன்னை நாடிப் பொருள்
முதலிழந்தோ ரனந்தங் கோடி
தேக உறுப்புகளோ டோடி கன
செல்வசுக க்ஷேமங்கொண் டாடி
ஏக பொன்பணியுட லெங்கும்
பூண்டிருந் தென்ன
ஆகமந்தனக்கொவ்வா தருங்
கேடுவருஞ் சொன்னேன்
அமைவுறும லேதமன்னிருவா கி
விமலகடவுடன் கமலபதமதி ல் (நெ)

௩ தந்தைதாய்சுதர் மனை யாளும் நொய்யுந்
தருணம்பின் வருமோசநீ கேளும்
சொந்தயிருந்திவைத் தாளு வோர்க்குத்
துணையாயுறுமோசொல் லெந் நாளும்
இந்தாதரையி லிவை யெல்லா
மவத்தம் பண்பிற்
சந்ததந்திரு மோக்ஷ தல
வாழ்வுதனை நம்பித்
தருணஞ்சவரிமுத் துரைசெய்மொழித னை
யுறுதிகொண்டொரே பொருளையனுதின ம் (நெ)

இராகம் தோடி சாப்புத்தாளம்.

பல்லவி.

மனமே பொருளைவிரும்பாதே சற்றும் (ம)

அநுபல்லவி.

அநுதினங்கவலைகொண் டலைந்திடச் சொல்லுஞ்
சனியன்போலவூரெங்குந்தா னோடிச் செல்லும் (ம)

சரணங்கள்.

க பிறரையுநம்மையும் பேதைபோ லாக்கும்
தரணியோர்நகைத்திடத் தாழ்வையுண் டாக்கும் (ம)

உ கோர்டின்முன்கைகட்டிக் கும்பிடச் செய்யும்
தீர்வைதெண்டனை துன்பத்தினுக்காளாய்ச் செய்யும் (ம)

ங கொலைகட்குட்பட்டுயிர்மாளக் கொண்டுபோய்த் தாக்கும்
இலகியதிருமோட்ச வின்பத்தைப் போக்கும் (ம)

இராகம் சங்கராபரணம் ஆதிதாளம்.

பல்லவி.

நெஞ்சேநான் சொல்லுவேன்கேளின்னமும் எந்தன் (நெ)

அநுபல்லவி.

வஞ்சப்பிரபஞ்சலோக மயக்கும னேகமாய்க்
கொஞ்சிக்கொஞ்சிக் கொஞ்சிக்கூடாதகல் வேகமாய் (நெ)

சரணங்கள்.

க அம்புவிதனிலுனக்கதனால் வருவ தென்ன
துன்பத்துக்காளல்லாமல் சுகமொன்றிலையே பின்னால் (நெ)

உ உல்லாசமாயிந்த வுலகினில்திரிந் தாலும்
வல்லோன்றீர்வையை வெல்லமாட்டாயேயொருக் காலும் (நெ)

ங அடுத்தடுத்ததிற்சிக்கி யலைவது பேதகந்
தொடுத்துனக்கனேகமாய்ச் சொன்னேனான் போதகம் (நெ)

இராகம் மோகனம் சாப்புத்தாளம்.

பல்லவி.

மனமேநான் சொல்வதைக்கேள் எந்தன் (ம)

அநுபல்லவி.

தனியாயெங்கும் வியாபி த்
தருள் சர்வேசனையல்லா ல்
இனிவேறு தெய்வக் க
ளில்லையிது சத்திய மே (ம)

சரணங்கள்.

க தமது திருநாமங்க ள்
தன்னை வியர்த்தமா க
நமது வாக்குதனு லே
நவில்வ தீதே மே (ம)

உ திருநாட்கள் தனையென்று ஞ்
சிந்தித்து ஆசரி த்
தறுதி தவறுவண்ண ம்
உச்சரிப்பது நன் றே (ம)

ங அனை தந்தைதனைச் சங்கி த்
த டியிணை துதிசெய்தா ல்
தினமும் நித்தியானந்த த்
தினிற்சென்று வாழலா ம் (ம

இராகம் பூபாளம் சாப்புத்தாளம்.

பல்லவி.

என்னெஞ்சமே கொலைசெய்வது மோசம்
இன்னமும்நான் சொல்வேன்கேளுப தேசம்

அநுபல்லவி.

அன்னியிதமிதுவல்லால் வேறுமுண் டாமோ
அரும்பழிநமக்கீவந் தணுகாமற் போமோ (எ)

சரணங்கள்.

க என்பராபரன்நமக் கேரு வகோரம்
எதிர்வாதிகள் மற்றோர்க்குமேக விகாரம்
துன்பதுயரமிஞ்சித் தோணுமே பாரம்
தொல்புவிதனி லிதனுலென்ன சாரம் (எ)

உ சர்க்கார்விர்ப்பந்தங்கள் தான்வந்து சாரும்
சண்டாளனென்றிந்தச் சகமெல்லாங் கூறும்
பற்கள்விரித்துக்கெஞ்சப் பரிதாபம் நேரும்
பலபலமிடியுற்றுப் பவுசெல்லாம் மாறும் (எ)

ங காசெல்லாம்விரையமாய்க் கைவிட்டுப் போகும்
சனகோர்ட்டார் சிப்பந்திகட்குப்பிரை யோகம்
தேசாதிபர்கள்சொன்ன தீர்ப்பேமெய் யாகும்
செடமடிந்ததின்பின்னர் சேர்வோந்தீப் பாகம் (எ)

இராகம் சங்கராபரணம் சாப்புத்தாளம்.

பல்லவி.

என்மனமே மோகபாசந்தன்னா ல்
இருநிலந்தன்னில்வரும் என்னென்னா மோசம்

அநுபல்லவி.

வின்னமேதுமில்லாச் சர்வேசனைப் பணிவாய்
விளங்குந்நித்திய மோட்சவீடுறத் துணிவாய் (ம)

சரணங்கள்.

௧ கண்விழியார்வேறோர் பெண்ணைப் பாராதே
காமபாவத்தில்விழக் கவலை கோராதே
மண்ணினில்நிதநிதமு மயங்கிச் சோராதே
வல்லோனருளியநல் வழியை மாறாதே (எ)

௨ மோகதாகத்தால்வரு மோச மனேகம்
முனைந்திட்டால் கேட்டுக்குள்ளாகுமே தேகம்
சாகுந்தனையும் நோயால்த்தவிக்குமே ஆகம்
சகதீசன்றனை நினைந்தாலோ நிர் வாகம் (எ)

௩ பவத்தைக்கவனியாமற் பத்தியைக் கோரு
பரமகதிக்கா ளாகும்படியே நீ பாரு
அவத்தன்னைவைத்தள்ளி யறவழி நேரு
அனவரதமுந்தேவன்றன் னருகில்ப்போய்ச் சேரு (எ)

இராகம் பூபாளம் சாப்புத்தாளம்.

பல்லவி.

என்னெஞ்சே களவுகள்செய்வது தீது
இவைநமக்குதவுமென் றெண்ணத் தகாது

அநுபல்லவி.

கன்னமாய்ப் பிறர்பொரு ள்
கைக் கொள்ள லாமோ
கணக்கு லக்கத்தில வை
காணாமற் போமோ (எ)

சரணங்கள்.

௧ தனக்குப்பின்னுதவுமென்றலோ சம் பாதிப்பார்
தாயாதிப்பங்குபோ லேனோ வீதிப்பார்
உனக்குமவர்களுக்கு முறவோ சோதிப்பாய்
உள்ளதுபோதுமென் றுறுதி சாதிப்பாய் (எ)

உ கண்டுபிடித்துக்கொண்டாற் சனவவ மானம்
கட்டியடித்துதைப்பார் சொல்லொண்ணு ஈனம்
மிண்டுடன் வசைசொல்வார் விதிவச மேனே
வேண்டாமித்தொழில்தனைவிடில் நலந் தானே (எ)

௩ கைதியாக்கியேகோர்ட்டில் கடுகியே சேர்ப்பார்
கனவதிகாரர் மெய்யாய்நடுத் தீர்ப்பார்
ஐயகோவெனச்சொல்லி அவதிகை யேற்பாய்
அறியேனென்றகலவோடிட வழி பார்ப்பாய் (எ)

இராகம் காம்போதி சாப்புத்தாளம்.

பல்லவி.

என்மனமேயுனக்கு இன்னமுஞ்சொல்கிறே ன்
இன்பமாய்நீ கேளா ய்

அநுபல்லவி.

தன்னிலறியாமற் பொய்ச்சாக்ஷிசொல்வது துரோகம்
சாஸ்வதமாய்நமக்குத்தான் வருமோபிர யோகம் (எ

சரணங்கள்.

க பலரும்நம்மைப்பழித்து பாவியென்றசங்கத ம்
பண்ணியே நகைப்பா ரே
உலகிலுயிருய்ம்போ தொருபலன்நமக் குண்டோ
உம்பர்கோன்கதிசேர உதவாதறறி கண்டாய் (எ)

உ பிறருக்குக்கேடுமதி பேருலகில்நினைந்தா ற்
பின்னமக்குச் செய்வா ரே
தருமமேஜெயமல்லாற் சகடவிகட மெல்லாஞ்
சகதீசன்றனக்கொவ்வா தன்யாயந்தா னல்லோ (எ)

௩ பருதிகண்டகன்றிடும் பனிப்போலவேபொய்க ள்
பாரில்நில்லாது மெய் யே
இருநிலந்தனிலே நானியம்பினேன் சூத்திரமே
இன்னமுனக்குச்சொல்வதில்லை யிம் மாத்திரமே (எ)

இராகம் மோகனம் ரூபகதாளம்.

பல்லவி.

என்னெஞ்சமேநான் சொல்வேன்கே ள்
யதார்த்தமாக வே

அநுபல்லவி.

தன்மனைவி யல்லாமலே யென்றும்
பிள்ளைவே றிச்சியாதிரு நன்று (எ)

சரணங்கள்.

க மங்களமாய்க்கல்யாணஞ் செய் ஒரே
மனைவிபோதா தோ
அங்கப்புஷ்டிகொண் டலைந்தி டாதே
எங்கடவுட் சேருத தீதே (எ)

உன்மனைமற்றவர்க்கும் அவையவம்
உடல் வித்தியாச மோ
வன்னவுருபம் நிறமுமொன் றல்லாற்
சொன்னீர்தசைகள் நரம்புவே றில்லை (எ)

௩ தன்மனைவியல்லாமல் யாவரு ந்
தாய் தமக்கையல் லோ
அன்னதால் தேவனருளியப டி
நன்னெறி வழுவாமலோ ட (எ)

இராகம் சங்கராபரணம் சாப்புத்தாளம்.

பல்லவி.

என்மனமே சொல்லக் கேளாய் சொந்த
இருநிதிகளும் உதவாமற்போம் பாழாய் (எ)

அநுபல்லவி.

அன்னதால் பிறர்பொரு ட்
கபேட்சை கொள்ளா தே
அமலோ னருள்மொழி யை
அகலத் தள்ளா தே (எ)

சரணங்கள்.

க நமக்குள்ளவாசைபோ லாருக்கு மிலையோ
நலமல்லநீயந்த கவலையைத் தொலையே
கழுக்கமாய்நான்சொன்னேன் கண்டுகொள் ளிலையே
கருத்தினிவிவை வெறுத்திடுவது மலையோ (எ)

உ பணந்தேடப்பிறரென்ன பாடுபட் டிருப்பார்
பற்றுதல்நீவைத்திடா தரு வருப்பாய்
கொணர்ந்தோடியுன்கையிற் கொடுத்தாலும் வெறுப்பாய்
குவலயந்தனிலேநான் சொன்னதைக் குறிப்பாய் (எ)

௩ அவரவர்க்குப்பொருள்மே லன்புளம் மாத்திரம்
ஆசையதின்மேல் நமக்கேனெயிம் மாத்திரம்
கவனமாயுனக்குநான் கழறினேன் சூத்திரம்
கண்டுகொண்டாலனந் தானந்தவிச் சித்திரம் (எ)

இராகம் பூபாளம் சாப்புத்தாளம்.

பல்லவி.

என்னெஞ்சமேசொல்வே னின்னமுங்கே வா
யென்னசுகமடைந்தோ மில்லையிந்நாளா ய்

அநுபல்லவி.

உன்னதகதிசேரவுகந் தெல்லாவற்றிலும்பார்க்க த்
தன்னேழைகளில்லாத சர்வேசனைச்சினே கி (எ)

சரணங்கள்.

க பலபொருட்களில் சற்று ம்
பற்றுதல் வையாம ற்
தலமெங்கும் நிறைந்தரு ள்
சர்வேசனைச் சினே கி (எ)

உ மகத்துவகீர்த்திப் பிரதா ப
மகிமையுற்றுங் கம்பாம ற்
சகமெல்லாம் படைத்தரு ள்
சர்வேசனைச் சினே கி (எ)

௩ இந்தாதரை சதமெ ன்
றெண்ணி பவம்போகாம ற்
சந்ததமுந் திவ் ய
சர்வேசனைச் சினே கி (எ

இராகம் மோகனம் சாப்புத்தாளம்.

பல்லவி.

என்மனமேயுனக்குச் சொன்னேன் கோடாகோடி
இன்னமென்ன சொல்குவே ன்

அநுபல்லவி.

தன்னைச் சினேகிக்கும்போ ல்
தான் மற்றெல்லோரையு ந்
தரணிதனிலொரு தாழ்வுறும லே
உறுதியாகவே யுகந்துவனுச ரி (எ)

சரணங்கள்.

க பரதேசியானாலும் பழித்திகழாமலே பாதுகாப்பதுநல மே
அறவழிதானிதுவல்லாமல் வேறில் லை
அன்புகூர்ந்திந் யதிகநேசமா ய்
வம்புறாமலே வணங்கியனுச ரி (எ)

ஒன்றுமிலாததா லூணற்றவர்கட்குநா ளுதவிசெய்வதுநல மே
நன்றியிதுவல்லாமல் நானிலத்தில்வேறில் லை
நகைத்திடாமலே நயந்து அவர்களை ச்
சுகத்திலிருத்தியே தொழுதுவனுச ரி (எ)

இடையில்வஸ்திரமில்லா தெளியவர்கட்குதுகி லீவதுநல மே
தடவரைசூழ்புவிதனிற் சவரிழுத்தென்போ ன்
சாற்றினேனொரு மாற்றமின்றி யே
போற்றியனைத்தையும் புகழ்ந்தவனுச ரி (அ)

மங்களம்.

இராகம் தீரசங்கராபரணம் ஆதிதாளம்.

பல்லவி.

மங்கள மங்கள மங்கள மே நித்திய
மங்கள மங்கள மங்கள மே

அநுபல்லவி.

பொங்கும் பிரகாசமெய் ப்
பூரண ஜோதியா ய்
எங்குமே நிறைந்தரு ள்
ஏக வனுதிக் கு (ம)

சரணங்கள்.

விண்டலம்பகலிருள் மின்மினிமதிகதி ர்
மண்டலம்யாவையும் வகுத்தவனுதிக் கு (ம)

திரிதொழிற்குரியதேவாதி சச்சிதானந் த
அரூபசொரூபநித்திய அமலவனுதிக் கு (ம)

சுத்தர்தமக்குசுகந்த சுகுணபதவியரு ள்
சத்தியவுத்தம சாட்சாதியனுதிக் கு (ம)

முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
	உச	யுந்தனுக்கி ன்னஞ்சர்	யுந்தனுக்கு இன்னஞ்சர்
எ	உரு	ரடியை	நடியை
அ	உஎ	ஓர்கதி	வேர்கதி
கூ	சு	பாபவி	பபவி
க	ஙஉ	கார்க்கும்	காக்கும்
கஉ	உசு	அன்பாய்வீ	அன்யாயவீ
கங	ககூ	கருதிட	கருதிடில்
கச	ஙஉ	நெப்போதோ	தெப்பவோ
கரு	ஙரு	வேறில்லையே	வேறில்லை
உச	உஉ	உய்ந்த	உய்த
சசு	ஙய	தமர்னிருவாகர	சமர்னிநுவாகர
கசு	ங	நெஞ்சே கேள்	நெஞ்சே நீ கேள்
கஎ	கஉ	கொலைகட்குட்பட்டு	கொலைக்குட்பட்டு
ய	கரு	வருமோ	வருமோ
	கூ	மனைமற்றவர்க்கும்	மனைவிமற்றவர்க்கும்
	கஉ	சொன்னீர்	சென்னீர்
	சு	எல்லாவற்றிலும்	எல்லா[illegible]திலும்

உலகெலாம் வாழ்க.

1053